பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 25 சனிக்கிழமை 11.12.2021 கதிர் 36



இது ரகசியம் அல்ல!

ஆமை பல நூறு முட்டைகளை இட்டுவிட்டு சத்தம் சந்தடியின்றிப் போகும். ஆனால் கோழி ஒரு முட்டையிட்டு விட்டு ஊரைக் கூட்டும் விதத்தில் கொக்கரித்து ஆரவாரம் பண்ணும்.

கொழும்பில் இருக்கும் மேற்குலகத் தூதரகங்

பக்கம்02

# பஸிலின் 'பட்ஜட்' நிறைவேற்றம்; அரசின் பலம் மீண்டும் நிரூபணம்



2022ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பு மேலதிக 93 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், வரவு – செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பு மீதான

08

# தமிழ் பேசும் மக்களைப் பிரிக்க முயற்சி; துணைபோகின்றனர் முஸ்லிம் எம்.பிக்கள்

## பிள்ளையானும் ஒத்தாசை என்று சாணக்கியன் குற்றச்சாட்டு




கொழும்பு, டிசெம்பர் 11

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களைப் பிரிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு முஸ்லிம் எம்.பிக்களும் பிள்ளையான் எம்.பியும் துணைபோகின்றனர்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

08

## நிறைவேறிய பட்ஜட்டுக்கு சபாநாயகர் சான்றுரை



2022 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 31 வரையான நிதியாண்டுக்கான அரசின் செலவுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட

2

## வவுனியாவில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் சாவு



(வவுனியா நிருபர்)


வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை 5.05 மணியளவில் இடம்பெற்ற

2

## வடமராட்சியில் நேற்று எஸ்.ரி.எவ். துரத்திச் சென்ற கன்ரர் விபத்து!

### சாரதி உள்ளிட்டோர் தப்பியோட்டம்



(இ.கலையமுதன்)

யாழ்., வடமராட்சி, வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த கன்ரர் ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதிச் சோதனை

2

## சபையில் பொன்சேகா – வீரசேகர மோதல் இன்னமும் ஓயவில்லை!

### நேற்றும் கடும் தாக்கு



பீல்ட் மார்ஷல் பதவியை வகிக்கும் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் கௌரவமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். தனது பதவி நிலை என்னவென்பதைப் புரிந்து செயற்பட வேண்டும்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட

08

## பிரியந்தவுக்காக மன்னிப்புக் கோரிய பாக். பிரதமர்; அதே பண்பாடு இலங்கை அரசுக்கு அறவே இல்லை

### சபையில் சிறிதரன் சுட்டிக்காட்டு



பிரியந்த குமாரவின் படுகொலைக்குப் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மன்னிப்புக் கோரியிருந்தார். இலங்கையில் இவ்வளவு படுகொலைகள் இடம்பெற்றும் மன்னிப்புக் கோரும் பண்பாடு அரசுக்கு இல்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சபையில் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

08

## 18 பேர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 9 பெண்களும்

08

### கள நிலைமைகளை நேரில் ஆராய

## இலங்கை வருகின்றார் ஐ.நா. உதவி செயலாளர்




ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர் ஐக்கிய

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களுக்குக் காவடி தூக்கும் ரெலோ அணியினரின் திருவிழா நேற்றும் தொடர்ந்தது. நேற்றைய திருவிழா உபயகாரர்கள் சுவிஸர்லாந்துத் தூதுவரும், அவரின் தூதரக அரசியல் துறைச் செயலாளரும்.

வழமை போல, நேற்றைய ரெலோவின் சந்திப்பின் பின்னர், அதன் ஊடகப் பேச்சாளரினால் அந்த சந்திப்பு 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்' சந்திப்பாகவும், அதில் பங்கு பற்றிய ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத் தலைவராகவும் 'படம் காட்டப்பட்டது'.

இந்தப் 'போலி அறிவிப்பு' நாடகம் வெற்றிகரமாகத் தொடர்ந்து அரங்கேறுகின்றமை தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன, அதன் 'உண்மையான' பேச்சாளர் என்ன கூறுகின்றார் என்பவற்றை இன்று வெளியிடுவேன் என நேற்றுத் தெரிவித்திருந்தேன்.

அதற்கு முன்னர், இன்னொரு விடயத்தை – ஆமை முட்டையிடுவதும், கோழி முட்டையிடுவதும் பற்றியதை – கூறுவது பொருத்தமானது என நினைக்கிறேன். கோழியைப் போல கொக்கரித்து, சத்தமிட்டு, ஆரவாரம் பண்ணி முட்டையிடுவதை ஆமை அறிவிப்பதில்லை. அதனால் ஆமை முட்டையிடுவதைத் தேடிக் கண்டு பிடிப்பது போல, தேடிக் கண்டு பிடித்த தகவல் இது. இந்த விடயத்தை அம்பலப்படுத்தியமைக்காக சம்பந்தப்பட்டோர் என் மீது பாயாதிருப்பார்களாக!

நேற்று சுவிஸ் தூதுவரை ரெலோ குழு சந்தித்து விட்டு வழமையான ஆரவார அறிக்கையை வெளியிட்டதல்லவா?

அதே சுவிஸ் தூதுவருடன் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு சந்திப்பு நடந்தது. அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் சுவிஸ் நாட்டிலிருந்து ஒரு விசேட குழு கொழும்பு வந்திருந்தது. அக்குழு ஏனைய தரப்பினர்களைப் போல கூட்டமைப்பினரையும் சந்தித்திருந்தது. அது பற்றிய செய்திகள் வெளியாகியிருந்தன.

அதன் பின்னர் இது நடந்தது. சம்பந்தனின் வழிகாட்டலில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையிலான சட்ட அறிஞர்கள் குழு அமெரிக்காவுக்குப் பயணமானதல்லவா? அது பயணமாவதற்கு முதல்நாள் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த சுமந்திரன், கனகேஸ்வரன், திருமதி நிர்மலா சந்திரகாசன் ஆகியோர் இதே சுவிஸ் தூதுவரையும், இதே சுவிஸ் தூதரக அரசியல் அதிகாரியையும் சந்தித்தனர்.

பகிரங்கப்படுத்தப்படாத இந்தச் சந்திப்பில் மிக முக்கிய விடயங்கள் சுமார் இரண்டு மணி நேரம் பேசப்பட்டன.

இப்போது ரெலோ குழுவினர் ஒரு மணி நேர திருவிழா தரிசனத்தின் பின்னர் வெளியே வந்து 'அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு' என்று அறிக்கையிடுகின்றமையை விட, முக்கியமான விடயங்கள் அந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

ஆனால், அந்தச் சந்திப்பு ஆமை முட்டையிட்ட கதை மாதிரி அமுக்கப்பட்டது. ஆரவாரப் பிரசாரத்துக்கான இந்தச் சந்திப்புப் பற்றி வெளியே வந்த கையோடே பகிரங்க அறிக்கை வெளியிட்டு கொக்கரிக்கப்படுகின்றது.

மூன்று, நான்கு நாள்களுக்கு முன்னர் கொழும்பில் இத்தகைய இன்னொரு சந்திப்பு ஒன்று நடந்திருக்கின்றது.

நெதர்லாந்து (டச்சு) தூதுவரின் இல்லத்தில் விருந்துடன், அது சத்தம் சந்தடியின்றி இடம்பெற்றிருக்கின்றது. டச்சுத் தூதரின் ஏற்பாட்டில் நடந்த இந்தச் சந்திப்பில் ருமேனியா, இத்தாலி, பிரான்ஸ், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களுடன் இலங்கையர் ஒருவர் மட்டும் பங்கு பற்றினார் என்பதை நான் என் செய்தி வட்டாரங்கள் மூலம் உறுதியாக அறிந்தேன். அந்த இலங்கையர் யார் தெரியுமா? கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்தான். அவர் அந்தச் சந்திப்பையோ அதில் பேசப்பட்ட விடயங்களையோ உறுதிப்படுத்த மறுத்து விட்டார். பதிலுக்கு எனக்குத் தகவல் தந்தவர் யார் என்பதை அறிவதுதான் அவர் எத்தனமாக இருந்தது.

"கூட்டமைப்பின் சார்பில் சர்வதேசத் தரப்புகளைக் கையாளும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டுள்ளது. அதில் பலவற்றை, பல சமயங்களில் நான் பகிரங்கப்படுத்தாமல்தான் செய்ய வேண்டியிருக்கும். அதுதான் இராஜதந்திர உறவாடல் முறைமை. எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்த என்னை வற்புறுத்தாதீர்கள்" – என்றார் அவர்.

அந்தப் பதிலில் நியாயம் இருப்பது போல எனக்குப் பட்டது.

"ஐந்து மேற்கு நாடுகளின் முக்கிய தூதர்கள் – அதில் ஒருவர் முழு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவர் – உங்களைத் தனியாக அழைத்து, ஒன்றாகப் பேசியிருக்கின்றார்கள் என உறுதியாக அறிந்தேன். அதே சமயம் ரெலோ சார்பில் ஒரு குழு ஒவ்வொரு மேற்குலக தூதரகத்துக்கும் மாறி மாறி காவடி தூக்கிச் சந்திப்புக்களை நடத்தி விட்டு, 'கூட்டமைப்புக் குழுவின் சந்திப்பு' என்றும், 'கூட்டமைப்பின் இணைத் தலைவர் செல்வம்' என்றும் அறிக்கை வெளியிடுகின்றதே. கூட்டமைப்பின் இணைத் தலைவராக செல்வம் எப்போது நியமிக்கப்பட்டார்?" – என்று சுமந்திரனிடம் கேட்டேன்.

"உங்கள் முதல் கேள்விக்கு – ஐந்து தூதுவர்களுடனான சந்திப்புக் குறித்து என்பதில் 'நோ கொமண்ட்ஸ்'. நான் அப்படிச் சந்திக்கவில்லை என்று மறுக்கவில்லை. எந்தக் கருத்தும் தெரிவிக்க மாட்டேன் என்றுதான் கூறுகிறேன்.

"அடுத்தது – கூட்டமைப்பின் சார்பில் வெளிநாட்டு விவகாரங்களைக் கையாளும் பொறுப்பு உத்தியோகபூர்வமாக என்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'கூட்டமைப்பு' என்ற பெயரில் இப்படி ஒரு தரப்பு தூதரங்களுடன் சந்திப்புகள் நடப்பதாக பத்திரிகை அறிக்கைகளில்தான் பார்க்கிறோம். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவும் அப்படிப் பத்திரிகைகள் வாயிலாகத்தான் பார்க்கிறார், அறிகிறார் என்று நானும் அறிந்தேன்.

"மூன்றாவது – கூட்டமைப்பு 'இணைத் தலைவர்கள்' என்று யாரும், எப்போதும் தெரிவு செய்யப்படவேயில்லை. அப்படித் தம்மைத் தாமே அழைத்துக் கொள்பவர்களை நாங்கள் சவாலுக்கு உட்படுத்தத் தேவையில்லை. சிலருக்கு சின்னச் சின்ன ஆசைகள் உண்டு. தங்களின் பெயர்களுக்கு முன்னால், தாங்களே 'சக்கரவர்த்தி', 'மாமன்னன்', 'மகாராஜா' என்று பட்டம் சூட்டிப் போட்டுக் கொள்வார்கள். அவர்களை நாம் என்ன செய்ய முடியும் – ஏளனத்துடன் எள்ளி நகையாடி சிரித்து விட்டுப் போவதைத் தவிர...? சிலர் தங்களுக்குத் தாங்களே கிளுகிளுப் பூட்டி, கிச்சு மூச்சுக் மூட்டி மகிழ்ந்து கொள்ளலாம். They can amuse themselves. அதை ஏன் நாங்கள் பெரிதுபடுத்துவான்...? ஏதோ விரக்தியில் இருக்கின்றார்கள். தங்களைத் தாங்கள வேடிக்கை பண்ணி மகிழ்ந்து விட்டுப் போகட்டும். அந்த அற்பத்தனத்தை நாம் ஏன் சவாலுக்கு உட்படுத்த வேண்டும்?" – என்று கேள்வியையே பதிலாகத் தந்தார் சுமந்திரன்.

அதில் நியாயம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டை நோக்கும் போது 'வந்ததும் அது, சிவன் தந்ததும் அது!' என்று தங்களுக்குள் தங்களை நொந்து கொள்வதைத் தவிர, கட்சியினருக்கு வேறு வழியில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் செயற்றிறனின்மை குறித்து நான் அதிகம் எழுதப் போவதில்லை. எழுத வேண்டிய அவசியமும் இல்லை. மக்களுக்கும், வாக்காளருக்கும் அது தெரிந்த – புரிந்த – விடயம்தான். அதனால்தான் கட்சியில் பத்து வேட்பாளர்களில் ஆறாவது இடத்தை யாழ். வாக்காளர்கள் அவருக்குக் கொடுத்தார்கள். அரசியல் பலத்தில் நோஞ்சான்கள் சிலர் பின்னால் வர இடம் இருந்தமையால் ஆறாம் இடம். இல்லையேல் பத்தாமிடம் நிச்சயம், உறுதி என்று நம்பலாம். ஆகவே, அவரை விட்டு விடுவோம்.

கட்சிக்குள் அடுத்த நிலையில் முக்கியமானது பொதுச் செயலாளர் பதவி.

'மாவை சேனாதி அண்ட் கோ' அல்லது 'அண்ட் சன்ஸ்' எடுத்த நிலைப்பாடு மற்றும் முறையற்ற விமர்சனத்தால், அதுவரை பொதுச் செயலாளராக இருந்த துரைராஜசிங்கம் பதவியைத் தாமே இராஜினாமாச் செய்து விலகினார்.

அந்த இடத்துக்கு சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்த சுமந்திரனே நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவருடன் பேசாமல் – அவருக்குத் தெரியாமல் – அடுத்த நிலையில் இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கத்தைப் பொதுச் செயலாளராகத் தம்மிஷ்டப்படி நியமித்தார் மாவை சேனாதிராசா. சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராக இருந்த சுமந்திரன்தான் அப்பதவிக்கு உரியவர். அவருக்கு அறிவிக்காமலலேயே – அவரை வெட்டி – சத்தியலிங்கத்துக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டது. சுமந்திரன் அதைப் பகிரங்கமாக எதிர்க்கவில்லை. குறைந்த பட்சம் ஆட்சேபிக்கக் கூடவில்லை. மாறாக, சத்தியலிங்கத்துக்குத் தனது ஆசீர்வாதத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கினார்.

சத்தியலிங்கம் வயதில் குறைந்தவர். துடிப்பாகச் செயற்படக் கூடியவர். வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்து அரும்பணியாற்றியவர். ஆனால் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பதவியில் தாம் வெறும் ஏட்டுக் சுரைக்காய்தான் என்றே நிரூபித்து வருகின்றார்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் என்றால் கட்சியைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரி. மத்திய குழுவின் வழிகாட்டலை செயற்படுத்தும் பிரத்தியேக, தனித்துவ அதிகாரங்கள் கொண்டவர்.

ஆனால், கட்சியின் தலைவர் செயற்றிறனற்றவர் என்று நன்கு தெரிந்தும், அவரின் எழுதுவிளைஞர் போல, ஏவல்பியோன் போல், அவரது சேவகன் போலப் பணியாற்றுகின்றார் சத்தியலிங்கம்.

'வந்ததும் அது, சிவன் தந்ததும் அது' என்ற மாதிரி, டாக்டர் சத்தியலிங்கத்தின் செயற்பாடும் 'செம்புகாவி' போக்கில் இருப்பது கண்டு வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

முதுகெலும்புள்ள கட்சி நிர்வாகிகள் வரும்வரை தமிழரசுக்கு எதிர்காலமில்லை. ரெலோ, புளொட்டுக்குக் கொண்டாட்டம் தான். ஒன்று தேய்ந்தால்தானே இன்னொன்று வளரலாம்...!

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர்,தலைவர் மாவை சேனாதிராசாவின் 'நல்ல கிளார்க்' ஆக எவ்விதம் செயற்படுகின்றார் என்ற முழு விவரத்தை நாளை தருகிறேன்.

– மின்னல் –

---

## இலங்கை வருகின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் அதன் ஆசிய – பசிபிக் பிராந்திய பணிப்பாளராகவும் உள்ளார்.

அண்மையில் முடிவடைந்த உலக காலநிலை மாநாட்டின் முடிவுகள் மற்றும் பிராந்தியத்தினுள் கொரோனாத் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என்பவற்றை ஆராய்வதே உதவி செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

இதன்போது அவர் விசேடமாக மனித வள அபிவிருத்தித்துறையின் வெற்றிக்காக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதில் அவர் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் குறித்த வாகனத்தை நிறுத்தியபோது வாகனத்தை நிறுத்தாது சாரதி தொடர்ச்சியாகப் பயணித்த நிலையில், விசேட அதிரடிப் படையினர் துரத்திச் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்த வாகனம் தொலைத்தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

சாரதி உள்ளிட்ட அதில் பயணித்தவர்கள் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் வாகனத்தைக் கைப்பற்றிய பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, குறித்த சம்பவம் இடம் பெறுவதற்கு முன்னர் அப்பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்திருந்தமையுடன் சாரதியையும் கைதுசெய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற உத்தராதேவி ரயிலானது வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் பயணித்தபோது ரயில் தண்ட வாளத்தில் ஒருவர் தலையை வைத்துப் படுத்திருந்த நிலையில் அவர் மீது ரயில் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் வவுனியா, தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா ரவி (வயது 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலத்துக்கு அருகில் குடும்பப் பிரச்சினை காரணமாக தற்கொலை செய்து கொள்வதாக எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் ரயில் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டு அது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சடலமும் வவுனியா ரயில் நிலையம் கொண்டு வரப்பட்டு ரயில் திணைக்கள அதிகாரிகளால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (100)

---

## 18 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடங்குகின்றனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 573 ஆக அதிகரித்துள்ளது.


# VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

This has reference to the advertisement dated **03.12.2021** calling application for the vacancies for the Academic positions at the following faculties:

1. Faculty of Engineering
2. Faculty of Agriculture

It is hereby amended the bank account details as follows;

"The deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account No: 970000090000387** of Bursar, University of Jaffna.".

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**09.12.2021**

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்




சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னெடுத்திருந்தனர்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு முன் இந்தக் கவன வீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச் சந்திரா தலைமையில் இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அருட்தந்தையர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, மனிதம் பாதுகாக்கப்படுகிறதா?, அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவீர்களா?' ஆகிய பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலை சிறந்த ஆசிரியத்துவ விருது யாழ்.இந்து கல்லூரி ஆசிரியருக்கு!

2021 ஆம் ஆண்டுக்கான தலை சிறந்த ஆசிரியத்துவத்துக்கான BIC Crystal eI விருதை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.ரமணன் பெற்றுக் கொண்டுள்ளார்.

விசேடமாக இடர் காலத்தில் தலை சிறந்த அர்ப்பணிப்புடன் எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி கற்பித்தலில் புத்தாக்க முறைமைகளைப் புகுத்தி நிகழ்நிலை கற்பித்தலில் மாணவர்கள் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கான வழிவகைகளைக் கையாண்டு மாணவர்களைக் கல்வியின் பால் தூண்டுவதன் மூலம் மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் கல்விப் பணியாற்றியமைக்காகவும் உலகின் அனைத்து தமிழ் மாணவர்களும் பயன்பெறும் வண்ணம் இலவசமாக ஆசிரிய பணியை முன்னெடுத்தமைக்காகவும் இந்த விருது வழங்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளிலுமிருந்து ஒவ்வொரு பிராந்தியங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பத்து வெற்றியாளர்களில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் இ.ரமணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இந்த விருதின் பிரகாரம் யாழ். இந்துக் கல்லூரிக்கு 5 ஆயிரம் யூரோ பணமும் (11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, 1,000 அமெரிக்கடொலர் பெறுமதியான பொருள்களும் நன்கொடையாக வழங்கப்பட இருக்கின்றன.

## புதிய முத்திரையுடன் வெளியிடப்பட்ட எரிவாயுவிலும் வெடிப்புச் சம்பவங்கள்



எரிவாயு நிறுவனங்களால் புதிய முத்திரையுடன் வெளியிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களிலும் வெடிப்புகள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில், இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தார்.

எரிவாயு வெடிப்புகளை விரைவில் நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை கடற்பரப்பிலிருந்து அகற்றல்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து அகற்றுவதற்காக, ஒரு கப்பல் இலங்கை கடற்பரப்பை சென்றடையும் என்று கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் நேற்று (வெள்ளிக்கிழமை) தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த கப்பல் 2022 ஜனவரி 19 அல்லது 20 ஆம் திகதிகளில் சென்றடையுமென அந்த ஆணையம் தெரிவித்துள்ளது. கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் கடந்த ஜூன் மாதம் தீ விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று(வெள்ளிக்கிழமை) தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையின் பொருத்தமான சீர்திருத்தங்களை இனங்கண்டு தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டத்தில் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இதனைக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் 2022 மார்ச் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைத் தேர்தல்களுக்கு தேர்தல்கள் ஆணைக் குழு ஏற்கனவே தயாராகி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு குறைந்தது 04 மாதங்களுக்கு முன்னதாகவே தயார்படுத்துவது இன்றியமையாதது என தேசிய தேர்தல் ஆணையத்தின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இதன்போது மேலும் வலியுறுத்தினார்.

நிமல் புஞ்சிஹேவாவின் கருத்துப்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போதைய சட்ட நிலைமைக்கு மாற்றமன்றி நடத்தப்பட வேண்டுமானால், தேர்தலுக்கான திகதிகள் 2022 ஜனவரியில் அறிவிக்கப்பட வேண்டும் எனக் கருதப்படுகிறது.

நாடாமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சீரழிவில் சட்டத்தின் ஆட்சி

**சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.**

**மனித உரிமைகளைப் பேணுவதில் முக்கியமானது சட்டத்தின் ஆட்சி.**

**நமது இலங்கை நாட்டைப் பொறுத்தவரை சட்டத்தின் ஆட்சி கேலிக் கூத்தாகியிருப்பதால் இங்கு மனித உரிமைகள் நிலைநிறுத்தப்படுவதும் ஏளனத்துக்குரியதாகியிருக்கின்றது.**

**சட்டத்தின் ஆட்சி முழுமையாக நிலை நிறுத்தப்படுவதற்கு நீதித்துறை நேர்மையாக – சுயாதீனமாக – சுதந்திரமாக – பக்கச் சார்பற்ற முறையில் – இயங்க வேண்டும். அப்படி இயங்கக் கூடிய தனித்துவ, சுயாதீன நிலையில் நீதித்துறை பேணப்பட்டால் மட்டுமே சட்டத்தின் ஆட்சி சாத்தியமாகும்.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் பௌத்த, சிங்கள பேரினவாத எழுச்சியை கிளற வைத்து, அந்த இனவாதத் தீயில் அரசியல் குளிர்காய்ந்தபடி, அதன் மூலம் பெருவெற்றியை ஈட்டினர் 'ராஜபக்ஷக்கள் அண்ட் பிரதர்ஸ்'.**

**அதன் மூலம் கிட்டிய நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு அவர்கள் செய்த முதல் காரியம் நீதித்துறை உட்பட பல முக்கிய நிர்வாகப் பரப்புகளின் சுயாதீன செயற்பாட்டுக்கு உறுதியளித்திருந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை அடியோடு விழுத்தி, இருபதாவது திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்ததுதான்.**

**அத்தோடு இலங்கையில் நீதித்துறை மீண்டும் ஆட்சித் தரப்பின் அடிவருடிக் கட்டமைப்பாக இயங்கும் கட்டாயம் நேர்ந்திருப்பதை சர்வதேசம் மௌனத்துடன் பார்த்திருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**சட்டத்தையும் நீதியையும் மீறிய தரப்புகளை எல்லாம் தண்டிப்பதற்கு நல்லாட்சிக் காலத்தில் நீதித்துறை எடுத்த முனைப்புகள் யாவுமே இப்போது அடியோடு முறியடிக்கப்பட்டிருக்கின்றன.**

**ஜனாதிபதி ஆணைக்குழுவின் பெயரால் தன் இசைக்குப் பரிந்துரை நாடகம் ஆடக்கூடிய ஏற்பாடு ஒன்றைச் செய்த நாட்டின் தலைவர், அதன் மூலம் சட்ட மீறல்களில் ஈடுபட்ட தன் ஆள்களைக் காப்பாற்றும் கைங்கரியத்தை கனகச்சிதமாக அரங்கேற்றி வருகின்றார்.**

**கப்பம் பெறுவதற்காகத் தமிழ் இளைஞர்கள் பதினொரு பேரைக் கடத்தி, பின்னர் காணாமலாக்கிய கொடூரத்தில் சம்பந்தப்பட்ட கடற்படைத் தளபதி, அவருக்கு எதிரான குற்ற வழக்கிலிருந்து நீதிமுறைமைக்கு மாறாக விடுவிக்கப்பட்டமை சர்வதேசப் பார்வையாளர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.**

**அது தொடர்பில் இலங்கையின் நீதித்துறையையும், சட்டமா அதிபரையும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கிழி, கிழி எனக் கிழித்து நாறடித்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். நிறைவேற்று அதிகாரத்தின் ஏவல் நாயாக நீதித்துறை மாறி வருகின்றமைக்கு இந்த விடுவிப்பு ஒரு சான்று.**

**நீதிமன்றத்தை மிக மோசமாக அவமதித்தமைக்காக, நீதிபதி ஒருவரின் முறைப்பாட்டின் பேரில், சர்ச்சைக்குரிய – அடாவடித்தனம் புரிகின்ற – ஒரு பிக்குவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்குகின்றது. இன்னொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி இருக்கின்றார் அந்தப் பிக்கு. அவருக்கு மன்னிப்பு அளித்து, விடுவித்து, நாட்டின் சட்டம், நீதி முறைமை எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் – பரிந்துரைக்கும் – ஜனாதிபதி செயலணியின் தலைவராக அவரை நியமித்து, அழகு பார்க்கின்றது நாட்டின் நிறைவேற்றதிகாரம்.**

**சட்டத்தின் ஆட்சி எத்தகைய சிரழிவு நிலையில் உள்ளது என்பதற்கு இவை எல்லாம் சான்றுகள்.**

# உயர்நிலைக் கல்வி முறைமையில் சீர்திருத்தங்கள் பல அவசியம்!

## ஜனாதிபதி தெரிவிப்பு



எமது நாட்டின் கல்வி முறைமை, தற்போதைய உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் காணப்படவில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விசேடமாக மூன்றாம் நிலைக் கல்வி முறைமையில் பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் காணப்படுகின்றதெனச் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய ஜனாதிபதி-

பல்கலைக்கழக மாணவர்கள் எந்தப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தாலும், அவர்கள் அனைவரும் குறைந்தது தகவல் தொழில்நுட்பத்திலேனும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதோடு, தற்கால உலகை வெற்றி கொள்வதற்கு அவசியமான ஏனைய திறன்களையும் பெற்றிருக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

நமது பல்கலைக்கழகங்களால், ஏற்கெனவே பல்வேறு புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர் தொகையைப் பத்தாயிரத்தால் அதிகரித்தமை தற்போதைய அரசாங்கம் அடைந்த பாரிய வெற்றியாகுமென்றும், அவ்வாறு அதிகரித்தாலும்கூட, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும், பல்கலைக்கழகக் கல்வியைப் பெறமுடியாத ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்னமும் இருக்கின்றனர் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதற்குக் காரணம், தகுதிபெறும் அனைத்து மாணவர்களுக்கும் இடமளிப்பதற்கு அரச பல்கலைக்கழக கட்டமைப்பில் போதுமான கொள்ளளவின்மையாகும்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு எமது இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இந்தப் பல்கலைக்கழகம் அரச பல்கலைக்கழகமாக மாத்திரம் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, உலகில் உள்ள அனைத்துச் சிறந்த பல்கலைக்கழகங்களும், அரச பல்கலைக்கழகங்கள் அல்ல என்றும் எடுத்துரைத்தார்.

ஆட்சேபனைகள் முட்டாள்தனமானவை என்பதோடு, பட்டப்படிப்புக்குப் பிறகு தொழிற்சந்தையில் வாய்ப்புகளை வழங்க முடியாத பல்கலைக்கழகங்களை மாணவர்கள் நாடமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

'நாட்டில் மூன்றாம் நிலைக் கல்விக்கான சுதந்திரமான சூழலை ஏற்படுத்துவதன் மூலம், சர்வதேசத் தரம்வாய்ந்த பிராந்திய உயர்கல்வி நிறுவனங்களை இலங்கைக்குள் ஈர்க்க முடிவதோடு, அதன் மூலம் இந்நாட்டில் வழங்கப்படும் கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்த முடியும்.

'காலப்போக்கில், இது இலங்கையின் உயர்கல்வித் துறையை பொருளாதாரத்துக்குச் சாத்தியமான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற வருமானம் ஈட்டக்கூடிய ஒரு வழியாக மாறும்' என்று நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, நாடு விரைவாக அபிவிருத்தியடைந்து, எதிர்காலத்தில் வளமான நாடாக மாற வேண்டுமாயின், இலங்கைக்கு அவசியப்படுவது உயர்க்கல்வி கட்டமைப்பில் பரந்த மாற்றத்தை ஏற்படுத்துவதாகும் என்றும் குறிப்பிட்டார்.

சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பாதுகாப்புக் கல்வி, முகாமைத்துவம், வர்த்தக மேலாண்மை, சட்டம், மருத்துவம், பொறியியல் மேம்பாட்டு முகாமைத்துவம், தொழில்நுட்ப விஞ்ஞானம், சமூகவியல், இணை சுகாதார விஞ்ஞானம் மற்றும் ஆக்கபூர்வமான சூழலியல் மற்றும் விண்வெளி அறிவியல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய வகையில் 1,408 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது.

இவர்களில் கலாநிதிப் பட்டதாரி ஒருவரும் பட்டப் பின்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா ஆகியோரும் அடங்குவர். இதன் போது, 1,180 பேர் தமது முதல் பட்டத்தைப் பெற்றுக்கொண்டனர்.

# ஆசிய பளுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கைக்கு தங்கம்

உஸ்பெகிஸ்தானில் இடம்பெற்றுவரும் ஆசிய பளுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கைக்கு தங்கப் பதக்கம் ஒன்று கிடைத்துள்ளது.

45 கிலோ பளுதூக்கும் போட்டியிலேயே இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீமாலி சமரக்கோன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.



# லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு தடை விதிக்கப்படல் வேண்டும்

## செந்தில் தொண்டமான் கோரிக்கை



லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு உடனடியாகத் தற்காலிகத் தடை விதிக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்–

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாகக் கடந்த ஒரு மாதகாலமாகப் பதிவாகும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் அச்சத்துடன் சமையலை மேற்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் உணவுகள் இல்லாமலும் தவித்துள்ளன.

இலங்கை என்பது ஒரு வெப்பமண்டல நாடாகும். வெப்ப சமநிலையைப் பேணும் வகையில்தான் எரிவாயு உற்பத்திகள் இதுவரை காலமும் இடம்பெற்றுவந்தன.

குறிப்பாக சிலிண்டர்களில் திரவவாயுவின் கலவை 80 சதவீதமாகக் காணப்பட்டது. திரவவாயு கலவை 80 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளமையால்தான் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன எனத் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

திரவவாயு சதவீதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால், அவ்வாறு திரவவாயு மாற்றத்துக்கான அனுமதியை வழங்கியது யார்?.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு உடனடியாகத் தற்காலிக தடைவிதிக்கப்பட வேண்டும். இதனால் ஓர் உயிர் ஏற்கனவே பறிபோயுள்ளது. ஆகவே, எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் லிட்ரோ காஸ் நிறுவனம் உடனடியாக வழங்க வேண்டும்.

இதேவேளை, திரவவாயு மாற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொலன்னறுவை சொலொஸ்மஸ்தான புனித பூமியின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை



பொலன்னறுவைவரலாற்று சிறப்புமிக்க சொலொஸ்மஸ்தான புனித பூமியின் அபிவிருத்தியை துரிதப்படுத்துமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பொலன்னறுவைவரலாற்று சிறப்புமிக்க சொலொஸ்மஸ்தான புனித பூமியின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் வகையில் அலரி மாளிகையில் இடம்பெற்றகலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சொலொஸ்மஸ்தான புனித பூமியை மின் விளக்குகளால் அலங்கரிப்பதன் அவசியத்தை அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக் கர்கண்டிவரலாற்றுச்சிறப்புமிக்க கெடிகே ரஜமஹா விகாராதிபதி மற்றும் பொலன்னறுவை சொலொஸ்மஸ்தானதிபதிவணக்கத்திற்குரிய வெண்டருவே உபாலி தேரர் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சீ.பெர்டினான்டுக்கு தெரிவித்த பிரதமர், எதிர்வரும் ஆண்டு மே மாதம் முதல் புனித பூமியின் மின் விளக்குக்கான மின் கட்டணத்தை மத்திய கலாசார நிதியத்தில் இருந்து செலுத்துமாறு மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்கவிடம் பணிப்புரை விடுத்தார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்கள் கோயிலைச் சுற்றி வருவதற்கு வசதியாக புனித பூமியினுள் வீதிகளை கார்ப்பெட் செய்து அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறிக்கு பணிப்புரை விடுத்தார்.

மனம்பிட்டிய மணல் அகழ்வின் மூலம் பொலன்னறுவை மாவட்ட செயலாளரின் கீழ் வரும் நிதியில் ஒரு பகுதியை புனித பூமியின் அபிவிருத்திக்காக வழங்குமாறு பிரதமர் இதன்போது பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஏ.தர்மசிறிக்கு தெரிவித்தார்.

புனித பூமியில் முன்னெடுக்கப்படும் கட்டுமானம் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக முப்படையினரின் ஆதரவைப் பெற்றுத்தருமாறு இதன்போது பிக்குமார் பிரதமரிடம் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்தனர்.

எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் முன்வைத்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதமர் தெரிவித்தார்.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக இலங்கையின் புனித பூமியின் அபிவிருத்திக்காக 1.5 கோடி அமெரிக்க டொலர் களை இந்தியாவிடமிருந்து கிடைக்கவுள்ளமையால், அந்நிதியின்ஒருபகுதியைசொலொஸ்மஸ்தான புனித பூமியின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும்எனபிரதமரின்செயலாளர் காமினி செனரத் குறிப்பிட்டார்.

பொலன்னறுவைசொலொஸ்மஸ்தான புனித பூமியின் அபிவிருத்திக்கான முனைப்பு பிரதமர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க சுட்டிக்காட்டினார்.

சொலொஸ்மஸ்தான புனித பூமியில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்தார்.

சியம் மஹா நிகாயவின் அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக் கர்கண்டிவரலாற்றுச்சிறப்புமிக்க கெடிகே ரஜமஹா விகாராதிபதி மற்றும் பொலன்னறுவை சொலொஸ்மஸ்தானதிபதிவணக்கத்திற்குரிய வெண்டருவே உபாலி தேரர் மற்றும் பொலன்னறுவை கல்விகாரை பொறுப்பதிகாரி வணக்கத்திற்குரிய கந்தநெடியே அந்ததஸ்ஸீ தேரர் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.




# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் காணாமலாக்கப்பட்டோர் போராட்டம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன் னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினம் டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

‘வலிந்து காணாமல்போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா’ போன்ற பல்வேறு கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது -

அண்மையில் பாகிஸ்தானுக்கு 30 ஆயிரம் கண்கள் தானம் செய்யப்பட்டமை தொடர்பாக வெளியான தகவலையும் வடபகுதி கரையோரங்களில் மிதக்கும் சடலங்கள் தொடர்பாகவும் கேள்வியெழுப்பினர்.

போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இதன்போது பங்கேற்றார்.

போராட்ட நிறைவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



# ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபா வரை எகிறலாம்!

## அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ கூறுகிறார்

இலங்கையில் ஒரு கிலோ கிராம் அரிசியில் விலை 500 ரூபாவை விடவும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினராக இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஒரு தொன் யூரியா 278 அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. இந்த நிலையில் இன்று ஒரு தொன் யூரியாவின் விலை 1,282 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அந்தவிலையில்யூரியாவை கொண்டு வந்து விவசாயம் செய்தால் ஒரு கிலோ அரிசி 500 ரூபாவை தாண்டும் என அவர் கூறியுள்ளார். இன்று இலங்கையில் 25 கிலோ யூரியா மூடை ஒன்று 9 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 217

**559. இந்திய - அமெரிக்க கள யதார்த்தமென எதைக் குறிப்பிடுகிறீர்கள்?**

சீனாவின்எழுச்சியால், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் புதிய கள யதார்த்தமொன்று இந்திய கடல் பரப்பில் ஏற்பட்டுள்ளது. 1987 இல் இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது இருந்தவை வேறு. பின் 2002இல் தொடங்கிய விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள், அதைத் தொடர்ந்து போர், இதனில் அமெரிக்காவும் இந்தியாவும் ஆற்றிய இணைந்த



பங்குகள், போரின் பிறகும் ஸ்ரீலங்காவுடன் தொடரும் இழுபறிகள், இவற்றுக்கு மத்தியில் சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டிய அணுகுமுறைகளில் அவர்களின் உறவு ஒடும் புளியம்பழமும் போல தொடர்கிறது.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த தனிப்பட்ட நெருக்கமான உறவு மோடிக்கு தற்சமய ஜனாதிபதி பைடனோடு இல்லை. இந்திய கடல் பரப்பில் இந்தியாவின் ஆளுமையை தனது உலக வல்லரசு ஆதிக்கத்துக்குப் பங்கம் வராத முறையிலேயே அமெரிக்கா ஏற்று இயங்குகிறது. சீனாவைக் கட்டுப்படுத்த உலக அரங்கில் இன்று இந்தியாவுக்கு அமெரிக்க உதவி இன்றியமையாதது என்பதை இந்தியாவும் புரிந்துள்ளது.



அதேசமயம் அதனது வழமையான நட்பு நாடான ரஷ்யாவுக்கு இவை தரும் ஆதங்கங்களையும் அது கணக்கெடுத்துள்ளது. இந்தப் புதிய களயதார்த்தம் அவர்கள் இருவருடையநலன்கள்கருதிமுன்னேறும். அதில் ஓர் அச்சாணியாக ஸ்ரீலங்கா இந்தியக் கடலில் இருப்பதை இந்த இரண்டு மட்டுமல்ல சீனா, ரஷ்யா, மேலைத்தேய நாடுகள் எல்லாமே தெரிந்துள்ளன. அதைத் தெரிந்துதான் ஸ்ரீலங்கா சின்ன சுண்டெலியானாலும் இந்த நாடுகள் எல்லாவற்றிடையேயும் பேரம் பேசுகிறது. அதில் நாட்டின் முழுமைக்குமான தங்களது பேராண்மையை முன்னிலைப்படுத்துகிறது.

இவற்றின் இடையில் தமிழ் மக்கள் கணிக்க வேண்டியது தங்கள் நலன் கருதி சர்வதேச அடிப்படையில் ஏற்படுத்த வேண்டிய முன்னெடுப்புக்களே. அதில் தங்களது முன்னெடுப்புக்களைப் பாதிக்கக் கூடிய நாடுகளின் அல்லது உதவக் கூடியவற்றின் குண நலன்களையும் போக்குகளையும் உள்வாங்க வேண்டும். அந்த நாட்டுடன் தொப்புக்கொள் கொடி உறவு உண்டா? நிலைத்த நண்பன் நண்பனாக முடியுமா? சந்தர்ப்பவாதியா? – என்பவையும் ஆராய்ந்து நோக்கப்பட வேண்டும்.

அமெரிக்கா சில சமயங்களில் மனிதாபிமானத்தையும் மனித குலத்திற்கெதிரான செய்கைகளைக் கட்டுப்படுத்தவும் நிலை நிறுத்தவும் தலையிடுவது உண்டு. அது தானும் மேலைத்தேய நாடுகளும் உலக வல்லரசுகளாகக் கொண்டு நடத்தும் சர்வதேச ஒழுங்குகளுக்கு குந்தகம் வராமலிருப்பதற்கும் அந்த வல்லரசு அதிகாரத்தை நிலைநாட்டவுமே. அதனைத் தவிர அமெரிக்கா சமூக நீதியையும் மனிதாபிமானத்தையும் மனித விழுமியங்களையும் மதித்து, மனிதாபிமான மேன்மைகளுக்காக தலையீடுகள் செய்வதில்லை. ஆனால் அவற்றுக்கு அது வழமையாகப் பாவிக்கும் அஸ்திரம் மனித உரிமை மீறல்களும் மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகளும் என்ற விவகாரம்தான்.

வியட்நாமிலிருந்து பல தென் அமெரிக்க நாடுகள் வரை தமக்கு சாதகமான அரசாங்கங்களை நிறுவுவதற்கு இந்த வழிமுறைகளைப் பாவித்தது. அதே சமயம் ஐ.நாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எத்தனையோ தீர்மானங்களை அது தங்களுக்கோ தமது நேச நாடுகளுக்கோ இக்கட்டுக்கள் தரும் என எண்ணினால் அவற்றைத் தங்களது தடுப்பதிகாரத்தின் மூலம் முடக்கி வைத்திருப்பதும் அமெரிக்காதான்.

ஈராக், லிபியாவில் உள்ளீடு செய்ததற்கு அமெரிக்கா கூறிய காரணங்களையும் இன்ரவேலுக்கு எதிராகப் பாலதீனத்துக்கு ஆதரவாக ஐ.நாவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை முடக்கியிருப்பதையும் உதாரணங்களாகப் பார்க்கலாம். ஆக, அமெரிக்கா தமிழர் பிரச்சினைகளின் அடிப்படைகளை ஏற்று, நிரந்தரத் தீர்வு ஒன்று நோக்கி உறுதியான ஆதரவு தர, வல்லரசாக நிலைப்பாட்டை எடுத்தால் அது அனுகூலமானதே.

**560.நல்லாட்சியை அமைக்கும்போது அப்படியான எண்ணப்பாடுகள் இருந்தனவா?**



இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அபிலாஷைகளில் ஒரு நிரந்தரத் தீர்வு என்பதிலும் பார்க்கத் தனது நலன்களுக்கு உதவக்கூடிய அரசாங்கங்களையும் அரச பிரதிநிதிகளையும் தேடுவதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாக இருக்கும். அதுவே இங்கும் இருந்தது.

அப்பொழுது ஸ்ரீலங்காவில் எந்த அரசியல் பகுதியோடு இணக்கத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது கூட்டமைப்பின் தெரிவாக இருக்கவில்லை. தங்களுக்கு ஆதரவாக ரணிலை ஆட்சியில் அமர்த்த வேண்டும் என அமெரிக்கா குறியாயிருந்தது. அந்த மாற்றத்துக்கு கூட்டமைப்பை ஒத்துக்கொள்ளச் செய்து, புதிய அரசமைப்பு உருவாக்கமும், மனித உரிமை மன்றில் அரசின் அனுசரணையும் இருக்கும் என்பதில் நம்பிக்கை தந்து அவற்றை ஏற்க வைத்தார்கள்.



ரணிலோடு நடந்த சில தனிப்பட்ட சந்திப்புக்களின் பின் சுமந்திரன் ரணிலால் தனக்கு தரப்பட்ட நகலோடு கனேடிய தமிழ்காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து, நல்லாட்சிக்கான ஆதரவு கோரி, கனேடிய அமைப்புகள் இணையாக நின்றவையும் சேர்ந்து நல்லாட்சிக்கு ஆதரவு தந்தன.

அந்த ஆட்சியில் ஒரு அரசியல் கைதி தன்னும் விடுவிக்கப்படாததாலும், தொடர்ந்தும் எந்தவிதமான எண்ணப்பாடுகளும் இல்லாமல் காணிகளில் குடியேற்றங்கள் நடந்ததும், அரசமைப்புச் சட்டம் பற்றி எதுவித முன்னேற்றமும் இல்லாததும் கனேடிய தமிழ் காங்கிரஸுக்கு மட்டுமல்லாமல் பொதுவாகவே தமிழ் மக்களுக்கு அதிருப்தியைத் தந்தது. இந்த நல்லாட்சிக் காலத்தைப் பற்றி விளக்கங்கள் ஏதுமில்லாமல் திரும்பவும் ஆதரவு கோரி அமெரிக்க திட்டங்களுடன் சுமந்திரன் போனபோது பழைய விரக்தியுற்றிருந்த கனேடிய காங்கிரஸின் அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்கப் போயிருந்தனர் எனவும், அதேபோல் அதிருப்தியிலிருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாலும் எதிர்ப்புக்கள் எழுந்தன எனவும் ஊடக செவ்விகள் தற்போது வெளிவருகின்றன.

இவற்றின் பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பழையபடியும் அரசாங்க மாற்றமாகவா அவர்கள் முன் முன்வைக்கப்படுவதுது, 'தமிழ் தேசம்' என்ற அடிப்படையா, அதற்கான கட்டமைப்புக்களை நிறுவுவதா என்பது தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தப் படவேண்டும்.



எல்லா சர்வதேச நாடுகள் போல் அமெரிக்காவும் ஸ்ரீலங்காவை ஒருநாடு என ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களுக்கான தீர்வு அவர்கள் 'சிறுபான்மையினர்' என்ற எண்ணங்களில் அமைந்ததால் தான் நல்லாட்சி கால அரசமைப்பும் ஒற்றுமையான, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாததான ஒரு நாட்டுக்குள் அமையும் என்று சொல்லப்பட்டது. அந்த நிலை இந்த சந்திப்புக்களின் பின் மாறுமா?.

அமெரிக்க விஜயத்தின் அடிப்படைகள் தமிழ் மக்களுடன் பொதுவெளியில் பகிரப்படாமலிருக்கும் போது, சாணக்கியன் 'அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்மென்றோ ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்றோ கூட்டமைப்பு ஒருபோதும் நினைக்கவில்லை. மாறாகப் பொருளாதாரத்தை வளர்க்கவும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இணைந்து செயல்படத் தயார் என்பதையே சொல்ல விரும்புகிறோம்'' என்கிறார். ஆட்சி மாற்றம் இல்லாமல், அமெரிக்க சர்வதேச அழுத்தங்கள் மூலம் தீர்வுக்கு வழிவகுக்கப்பட்டால், அது இந்த அரசாங்கத்துடனும் அதன் ஜனாதிபதியுடன்தான் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படியானால் அரசமைப்புச் சட்டத்தின் வரைவு டிசெம்பரில் நாடாளுமன்றத்தில் வெளியிடப்படுமென்ற



தகவல்கள், 'ஒரு நாடு; ஒரு சட்டம்; ஒரு மக்கள்' என்ற ஜனாதிபதியின் முனைப்புக்களின் ஓட்டங்கள் என்னவாவது?

சாணக்கியன் வெளிப்படுத்தும் இணைந்து செயற்படத் தயார் என்பது எவ்வாறான இணைப்பு?

(வளரும் .....)

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** ஒன்றரை மணிநேரம் மட்டுமே பதவி வகித்தாலும் அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதி எனும் பெருமைக்கு ஆளாகியிருக்கும் தமிழச்சி கமலா ஹாரிஸ் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?


கமலா ஹாரிஸ்

**பதில் :-** முதல்வன் படத்தில் வந்த ஒருநாள் முதல்வர் போல, ஒன்றரை மணிநேர ஜனாதிபதியாய் வந்து சாதனைப் பெயர் தட்டிச் சென்றுள்ளார். தமிழினத்தைச் சார்ந்த பெண்மணி என்ற வகையில் நாம் எல்லோரும் கூடப் பெருமைப்படலாம்தான். ஆனால் கமலா ஹாரிஸ் பெயரளவில் மட்டும் தான் தமிழ்ப் பெண்மணியாய் இருக்கிறார். உண்மையில் முழுக்கமுழுக்க அவர் இன்று அமெரிக்கப் பெண்மணிதான். இந்த ஒன்றரை மணி நேரப் பதவி அவருக்குத் தற்செயலாக வந்த பெருமைதான். பதவியேற்பின்போது ஜோ பைடன் துள்ளித் துடித்து ஓடி வந்து இளமை காட்டியபோதும், அவரது முதுமை வெளிப்படையாய்த் தெரியத்தான் செய்கிறது. அதனால் தற்செயலாய் வந்த இப் பெருமை கமலா ஹாரிஸுக்கு நிரந்தரமாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. பதவியேற்பில் கமலா காட்டிய கம்பீரம், அன்றைய அவரின் உரையில் இருந்த தெளிவு என்பவை அவரது ஆற்றலை ஊகிக்கப் போதுமானவையாய் இருந்தன. எனவே அதிர்ஷ்டத்தால் வந்த இந்தச் சாதனையைவிட ஆற்றலால் அவர் செய்யப்போகும் சாதனைகள் உயர்ந்தவை யாய் இருக்குமென நம்பலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:-** பின்ன கமலாக்காவும் எங்கட தமிழர்களுக்கு சப்போட் பண்ணமாட்டாவாமோ?

**2. கேள்வி:-** கிழவர்களுக்கெல்லாம் மூன்றாவது தடுப்பூசியும் போடுகிறார்களாமே. நீங்கள் போட்டு விட்டீர்களா?

**பதில் :-** என்ன கிண்டலா? கிழவன் என்று யாரும் சொன்னால் இதுவரை மனம் கவலைப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் இந்தத் தடுப்பூசி விடயத்தில் கிழவனாய் இருந்ததுவே தகுதியாய்ப் போயிற்று. கிழட்டுத் தகுதியைச் சொல்லி மூன்றாவது ஊசியையும் குத்திவிட்டேடன். இரண்டு இந்திய ஊசிகளைக் குத்திய ஆறுமாதத்தின் பின் இப்போது அமெரிக்க ஊசி குத்தியிருக்கிறேனாக்கும்! ஏதோ இந்தத் தடுப்பூசிகளால் எனது மரணப்பாதை அடைபட்டுவிட்டது போலும், இனி எனக்கு மரணமே இல்லையென்பது போலும் மனத்தினுள்ளே ஒரு சிறிய குதூகலம் உண்டாவது வியப்பாக இருக்கிறது. என்னத்தைப் படித்து என்ன பிரயோசனம்? மரண பயம் எல்லோரையும் ஆட்டிவைக்கத்தான் செய்கிறது!

**உலகநாதரின் ஒப்பீனியன்:-** உலகே மாயம்! வாழ்வே மாயம்! நிலையேது நாம் காணும் சுகமே மாயம் ஹி..ஹி.. ச்சும்மா..ச்சும்மா...

**3. கேள்வி:-** மதவெறியால், பாகிஸ்தானில் சித்திரவதை செய்து அநியாயமாய்க் கொலை செய்யப்பட்ட நம் நாட்டைச் சேர்ந்த பிரியந்த குமார தியவதன அவர்களின் மரணத்தால் இலங்கையே கொதித்துப் போய்க் கிடக்கிறது. மஹாநாயக்க தேரர்கள் தொடங்கி, அரசியல் தலைவர்கள் வரை அவர் கொலைக்குக் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். உங்கள் அபிப்பிராயத்தையும் இங்கு பதிவு செய்யலாமே?

**பதில் :-** யாரும் கேட்கமாட்டார்களா என்று காத்திருந்தேன். கேட்டமைக்காக உங்களுக்கு மிகுந்த நன்றிகள். மனிதாபிமானமே இல்லாத அந்தக் கொலைச்சம்பவத்தை Youtube இல் வேறு பதிவேற்றியிருக்கிறார்கள். ஒருசில நிமிடங்களுக்கு மேல் அக்காட்சியைப் பார்க்கவே முடியவில்லை. அத்தனை வெறித்தனம். மிருகங்களை விடக் கேவலமாய் நின்ற மனிதர்களைக் கண்டு ஐம்புலனும் நடுங்கிப் போயிற்று. அச் சம்பவம் பற்றி இரண்டு எண்ணங்கள் மனதில் பதிவாகின. அவற்றை ஒவ்வொன்றாய்ச் சொல்கிறேன். சுவரில் ஒட்டியிருந்த ஒருபோஸ்ரரை அதன் அர்த்தம் தெரியாமல் கிழிக்கப் போக, அதை மத அவமரியாதையாய்க் கொண்டு, அந்த மனிதரை வெறி நாயை அடிப்பதைப் போல அடித்தே கொன்றிருக்கிறார்கள் மனித வெறிநாய்கள். மதப்பற்றுத் தேவையானதுதான். ஆனால் இதை மதப்பற்றாய்க் கொள்ள முடியவில்லை. சரியாய்ச் சொன்னால் இது மதவெறி. சகோதரத்துவத்தைப் போதிக்கும் இஸ்லாமிய மதத்தின் பெயரால் இத்தகைய ஒரு படுகொலையா? உண்மையில் பிரியந்த குமார தியவதன இஸ்லாமிய மதத்தை இழிவு செய்யவில்லை. இக்கொலையில் ஈடுபட்டவர்கள்தான் அம்மதத்தையும் நபிகள் நாயகத்தையும் இழிவு செய்திருக்கிறார்கள். சரியாய்ச் சொல்லப் போனால் இறைவனையே அவர்கள் இழிவு செய்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. பாகிஸ் தானிய மக்கள் பலரும்கூட இச் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள் என்பதுதான் ஒரேயொரு ஆறுதல். பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான்கான் உடனடியாக இச்சம்பவத்தில் சம்பந்தப் பட்டவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பது

> **‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**

நடுநிலையான அறம் சார்ந்த செயல்.

இரண்டாவதாக என் மனதில் தோன்றிய எண்ணத்தையும் இங்கு பதிவு செய்யாமல் இருக்க முடியவில்லை. அந்தக் கொலைச் சம்பவத்தைப் பார்த்தபோது எழுபத்தேழில் நமது நாட்டில் நடந்த இனக்கலவரம் என்கின்ற கொலை வெறி ஆட்டந்தான் ஞாபகத்திற்கு வந்தது. அங்காவது ஒரு மனிதனின் செயலைத் தவறுதலாகப் புரிந்து வெறிக் கூத் தாடினார்கள். இங்கோ எந்தத்தவறும் செய்யாத, சகோதரர்களாய் உடன் இருந்த, தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதாபிமானமே இல்லாத வன்முறை களைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. வெட்டிக் கொல்லப்பட்டவர்களும், உயிரோடு எரிக்கப் பட்டவர்களுமாக அநியாயமாய் வதைக்கப்பட்டோர் தொகை நூற்றுக்கணக்காய் விரிந்தது. இப்போதும் ஊடகங்களில் அடிக்கடி வெளிவரும் நிர்வாணமாக்கப்பட்ட ஒரு தமிழனைச் சுற்றிநின்று வதைசெய்யும் சிங்கள இளைஞர் கூட்டம் ஒன்றின் புகைப்படப் பதிவின் கொடூரம் சகிக்கமுடியாதது. வேற்று நாட்டாரால் அநியாயமாய் வதை செய்யப்பட்ட ஒருவருக்காகக் கொதிக்கும் இவர்கள், நம் நாட்டில் நம்மவர்களால், தமிழர்கள் வதை செய்யப்பட்டபோது வாய் திறக்காதது அநியாயத்தின் உச்சம்! அப்போது அச்சம்பவங்களைக் கண்டிக்காத எவர்க்கும் இப்போது இச்சம்பவத்தைக் கண்டிக்கும் உரிமை இல்லை என்றே நினைக்கிறேன். இம்ரான்கான் செய்ததுபோல அப்போது நம் நாட்டுத் தலைவர்கள் உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் அடுத்தடுத்த இனக்கலவரங்களும் அதனால் வெடித்த தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆயுதப் போராட்டமும், அதனால் இத் தேசத்திற்கு ஏற்பட்ட அழிவுகளும் நிகழ்ந்திருக்காது. அன்று, தம் கண் முன்னால் நடந்த அநியாயத்தைக் கண்டிக்காமல் விட்டுவிட்டு இன்றைய சம்பவத்திற்காய்க் கொதிப்பவர்கள் வெட்கங் கெட்டவர்களேயாம்!


கொழும்பு பொரளை பஸ் நிலையத்துக்கு அருகில் அப்பாவித் தமிழ் இளைஞன் ஒருவனைப் படுகொலை செய்வதற்கு முன்னர் நிர்வாணமாக்கி இம்சைப்படுத்தும் சிங்கள இளைஞர்கள். (கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான ’அத்த’வின் படபிடிப்பாளர் சந்திரகுப்த அமரசிங்க பிடித்த படம் இது)

**உலகநாதரின் ஒப்பீனியன்:-** சபாஷ்! சரியான நெற்றியடி. நம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது வாரிதியார் சொன்ன அன்றைய இனக் கலவரப் படத்தையும், இன்று பிரியந்த தியவதனவுக்கு நடந்த அநியாயப் படத்தையும் நாடாளுமன்றில் காட்டி நியாயம் கேட்கலாமே! (அதுக்கு ஸ்பைனல் கோட் டெல்லோ இருக்க வேணும் ஹி..ஹி..)

**4. கேள்வி:-** கொரோனாவின் அடுத்த புதிய பதிப்பான ஒமிக் ரோன் பிறழ்வு வந்துவிட்டதாமே?




**பதில் :-** எப்போதும் சொல்வதைத்தான் இப்போதும் சொல்ல நினைக்கிறேன். அழிவு வராமல் காப்பதே அறிவின் வேலை என்றார் வள்ளுவர். (அறிவு அற்றம் காக்கும் கருவி). அறம் இல்லாத, இன்றைய பொருள் உலகத்தார், அறிவை அழிவுக்காகப் பயன்படுத்து வதையே வேலையாகக் கொண்டு இயங்கி வருகிறார்கள். அழிவுக் கருவிகளைக் கண்டுபிடிப்பதில் ஒருவருக்கொருவர் போட்டியிடும் அநியாயம் தொடர்ந்து நடக்கிறது. இயற்கையும் எத்தனை நாள்தான் பொறுக்கும்? அதன் கொந்தளிப்புத்தான் கொரோனா. இந்தியத் தொலைக்காட்சிகளில் வரும் ஒரு விளம்பரத்தில் ஒரு பெரிய பொலிஸ் அதிகாரி தன் மகனிடம், பெரியபெரிய திருடர்கள் எல்லாம் என்னைக் கண்டால் பயப்படுவார்கள் என்பார். உடனே அந்தச் சின்ன மகன், அப்படியென்றால் இந்தச் சின்னச்சின்னக் கொசுக்கள் எல்லாம் உங்களுக்கு ஏன் பயப்படுவது இல்லை என்று கேட்பான். அதுதான் இன்று உலகத்தில் நடக்கிறது. பெரியபெரிய நாடுகளை அழிக்கும் பெரியபெரிய ஆயுதங்களைக் கண்டுபிடித்தவர்கள் சின்னச்சின்னக் கிருமியை அழிக்க வழிதெரியாமல் திணறுகிறார்கள். அந்த விளம்பரத்தில் அந்தப் பையனின் தாய் குறுக்கிட்டு கொசுக்களைப் பயப்படுத்த இதுதான் வழி என்று ஒரு கொசுமருந்தைக் காட்டி விளம்பரம் செய்வார். அவர் பாணியில் சொல்வதானால் இந்தச் சின்னச்சின்னக் கிருமிகளை அழிக்க அறம்தான் ஒரே வழி என்று சொல்லவேண்டியிருக்கிறது. அறத்திற்கு மனிதன் அடங்கும் வரையும் இன்னும் பற்பல புதிய கொரோனாப் பதிப்புக்கள் வரத்தான் போகின்றன.

**உலகநாதரின் ஒப்பீனியன்:-** வாரிதியார் நல்லா ரி.வி.பார்க்கிறார் போல. ஹி...ஹி..

**5. கேள்வி:-** கூட்டமைப்புக்குள் பெரும்பாலானோர் சுமந்திரனை எதிர்ப்பதாய்த் தெரிகிறது. மக்கள் மனநிலையும் அதுவாகத்தான் தோன்றுகிறது. நீங்கள் மட்டும் அவரை ஆதரிப்பதன் காரணம் என்ன?


சுமந்திரன்

**பதில் :-** எனக்கு ஒரு மாமா இருந்தார். அவர்கள் வீட்டில் மொத்தம் பத்து உருப்படிகள். அங்கே என் மாமியைத் தவிர வேறெவர்க்கும் சமையல் என்பது சுட்டுப்போட்டாலும் வராது. சுடுதண்ணீர் வைக்கக் கூட அவர்களுக்குச் சரியாய்த் தெரியாது. நான் அவர்கள் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் ஓர் ஆச்சரியத்தைக் காண்பேன். எங்கள் மாமிக்குச் சமையலில் எந்த உதவியும் செய்யாமல் இருந்துகொண்டு, தனி ஆளாய் அவர் ருசியாய்ச் சமைத்துப் போடும் உணவுகளை நன்றாக விழுங்கியபடி அந்த வீட்டில் உள்ள மற்றவர்கள் எப்போதும் மாமியைக் குறை சொன்னபடியே இருப்பார்கள். மாமியும் அதைச் சகித்துக் கொண்டு தொடர்ந்தும் அவர்களுக்குச் சமைத்துப் போடுவார். ஒரு நாள் மாமி இல்லாவிட்டால் அந்த வீட்டாரின் கதி என்னாகும் என்று நினைத்துக் கொள்வேன். இந்தக் கதைக்குள் உங்கள் கேள்விக்கான பதில் இருக்கிறதா? என்று பாருங்கள்.

ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். தம் முகம் மறைத்து இணைய வெளிகளில் சுமந்திரனைச் சிலர் திட்டுகிறார்கள். வெளிநாட்டு விஜயங்களின்போது அவர் கூட்டங்களை வேறு சிலர் குழப்புகிறார்கள். அங்ஙனம் சுமந்திரனை எதிர்ப்போர் தொகையென்பது மிகக் குறைவானது. நூறு அமைதியானவர்கள் மத்தியில் ஒரு பைத்தியக்காரன் எப்போதும் தனித்துத் தெரிவான்.

அது போலத்தான் இந்த எதிர்ப்பாளர்களும் தம்மை உலகிற்கு தனித்து இனங்காட்ட சுமந்திரன் எதிர்ப்பு எனும் ஆயுதத்தைத் தூக்கி இருக்கிறார்கள். அவ்வளவே! ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். மேற்சொன்ன பத்து அல்லது நூறு பேர்கள் எங்கே? தாய் மண்ணில் சுமந்திரனுக்கு வாக்களித்த இருபத்தினான்காயிரம் பேர்கள் எங்கே? நான் கணிதத்தில் கொஞ்சம் வீக்தான். கெட்டிக்காரரான நீங்களே சொல்லுங்கள், நூறா அல்லது இருபத்தினான்காயிரமா பெரிய தொகை?

காலைக்கதிர் Kalaikkathir

# பல்கலை மாணவர்களின் பதிவுக் கால எல்லை நீடிப்பு



பல்கலைக்கழக மாணவர்களைப் பதிவு செய்யும் கால எல்லை மேலும் நீடிக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களைபதிவு செய்யும்கால எல்லை நேற்றுடன் நிறைவ டையும் நிலையில், குறித்த பதிவு செய் யும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பல்கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால எல்லை எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை வர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரி வித்துள்ளார்.

# விறகு தேடிக் காடு சென்ற வயோதிபப் பெண் மாயம்!

நுவரெலியா மாவட்டம், வலப்பனை - கும் புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

கும்புக்வெல - மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி மெனிக்கா என்ற மூதாட்டியே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அவர் கடந்த 6ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றுள்ளார். அவர் இதுவரை வீடு திரும் பாத நிலையில் அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் அருகில் உள்ள தெரிபே பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட் டுக்கு அமைய பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்த போதிலும் மூதாட்டியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

எனினும், கடந்த 8 ஆம் திகதி முன் னெடுத்த தேடுதலில் குறித்த மூதாட்டி விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியைக் கண்டுபிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின்னர், அருகில் உள்ள காட்டில் தேடியபோது, உடைந்த மரக் குற்றியில் குறித்த மூதாட்டி அணிந்தி ருந்த உடையும், விறகு தூக்கும்போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெடுக்கப்பட்டுள் ளது. எனினும், மூதாட்டியைக் கண்டு பிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களைப் பயன் படுத்தி மூதாட்டியைக் கண்டுபிடிக்க பொலி ஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், இதுவரை காணாமல் போன டிங்கிரி மெனிக்கா தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### தமிழ் பேசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்துத் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்க வேண்டும்.

விசேடமாக நீங்கள் தமிழ் பேசும் நாடா ளுமன்ற உறுப்பினராக இருந்தால், இதற்கு ஆதரவாக வாக்களிக்க நீங்கள் நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

நீண்டகாலமாகச் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, முகநூல் பதிவுகளுக்காகச் சிறைகளி லுள்ளவர்களின் விடுதலை, வடக்கு - கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப் பைத் தடுத்து நிறுத்துங்கள் என நிபந் தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக் கலாம்.

அதேபோன்று இஸ்லாமிய நாடாளு மன்ற உறுப்பினராக இருந்தால், ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்ப வத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட் டுள்ள சந்தேகநபர்களின் விடுதலை, கொரோனாவால் உயிரிழப்போரின் ஜனா சாக்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதை நிறுத்துங்கள், ஞானசார தேரர் தலைமையிலான செயலணியைக் கலையுங்கள் உள்ளிட்ட நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம்.

மேலும், அண்மையில் கிண்ணியா வில் படகு விபத்தில் உயிரிழந்த சிறுவர் களை நினைத்துக்கொண்டு நீங்கள் அனைவரும் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். அங்கே சிறுவர்கள் உயிரிழந்த நிலையில் இங்கே களனிப் பாலம் திறந்து வைக்கப்பட்டி ருந்தது. அதனையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அத்துடன், இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களைப் பிரிப்பதற்குரிய நட வடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு முஸ்லிம் எம்.பிக்களும் பிள்ளை யான் எம்.பியும் துணைபோகின்றனர் - என்றார்.

### சபையில் பொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் கூறியதாவது:-

பீல்ட் மார்ஷல் பதவி இராணுவத்தின் உயர் பதவியாகும். அந்தப் பதவியை வகிப்பவருக்கு அரச சலுகைகள் வழங் கப்படுகின்றன. இதற்கு மக்கள் பணமே செலவிடப்படுகின்றது. எனவே, மக்க ளுக்கு சரத் பொன்சேகா சேவையாற்ற வேண்டும்.

நல்லாட்சி அரசு போர்க்குற்றம் தொடர் பில் படையினரைக் காட்டிக்கொடுத்தது. அப்போது பொன்சேகா மௌனம் காத் தார் - என்றார்.

சரத் பொன்சேகாவுக்கும் சரத் வீரசேக ரவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் தொடர் சொற்போர் நீடித்து வருகின்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் சரத் பொன்சேகா ஆற்றிய உரை மற்றும் நேற்று சரத் வீரசேகர ஆற்றிய உரைகளில் இருந்து பொருத்தமற்ற விடயங்களை நீக்குமாறு சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

### பிரியந்தவுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

இந்தச் சம்பவம் போல் இலங்கை யிலும் இடம்பெற்றுள்ளன. விடுதலைப் புலிகளின் தளபதியாக இருந்த ரமேஷ் மெல்ல மெல்ல வெட்டிக் கொல்லப்பட்டார். இது குறித்த படங்களும் வெளியாகியி ருந்தன.

இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன் றவர்களும் அந்தக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டனர். அவை குறித்த படங்க ளும் வெளியாகியிருந்தன.

பிரியந்தவின் படுகொலைக்குப் பாகிஸ் தான் பிரதமர் இம்ரான்கான் மன்னிப்புக் கோரியிருந்தார்.

எனினும், இலங்கையில் இவ்வளவு படுகொலைகள் இடம்பெற்றும் மன்னிப் புக் கோரும் அந்தப் பண்பாடு அரசுக்கு இல்லை - என்றார்.

### நிறைவேறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சபாநாய கர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சான்றுரைப்படுத்தினார்.

# பஸில் வந்ததால் நிதி நெருக்கடி தீர்ந்ததா?

## அரசிடம் அநுரகுமார கேள்வி



பஸில் ராஜபக்ஷவுக்கு ஏழு மூளைகள் உள் ளன. அவர் நிதி அமைச்சரானால் நிதி நெருக்கடி தீரும் என ஆளுங்கட்சியி னர் பிரசாரம் செய்தனர். நேற்று பஸில் தான் நிதி அமைச்சர். ஆனால், நிதி நெருக் கடி அதிகரித்துள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய அவர்,

பஸில் வந்தால் செல்வம் பெருகும் என்றார்கள். அது நடக்கவில்லை. அதன் பின்னர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக வந்தால் நிதி நெருக்கடி தீரும் என்றார்கள். ஆனால், இன்று என்ன நடக்கின்றது?

பால் மா இறக்குமதியைக்கூட ஒரு வருடம் நிறுத்த வேண்டிவரும் என நிதி அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

அந்தளவுக்கு நிதி நெருக்கடி உச்சம் பெற்றுள்ளது. எனவே, பொறுப்பான முறையில் பொருளாதாரத்தை முகாமை செய்ய வேண்டும் - என்றார்.

# 51 எயிட்ஸ் நோயாளர்கள் அம்பாறையில் அடையாளம்



அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். அதன்படி கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு கல்முனை பிராந்தியசுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் மாலை நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் சபையால் டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. 1981ஆம் ஆண்டு முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து இன்று வரை 3.6 கோடி மக் கள் இந்த எயிட்ஸ் நோயால் இறந் துள்ளனர். 3.7 கோடி மக்கள் இன்று வரை எயிட்ஸ் நோயுடன் வாழ்ந்து வரு கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 2 ஆயிரத்து 600 பேர் சிகிச்சையை எயிட்ஸ் நோய்க்காகப் பெற்றுக்கொண் டிருக்கின்றார்கள். இன்றும் இலங்கை யில் ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் எம் மிடையே மறைந்து வாழ்கின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படு கின் றனர். கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயானது ஒருவரின் நிர்ப் பீடணசக்தியை இல்லாதொழிக் கின்றது. இந்த நோயானது 3 முறைகளில் பிரதா னமாகப் பரவல் அடைகின்றது. அதாவது பாதுகாப்பற்ற பாலியல் செயற்பாடு, பாதுகாப்பற்ற ஊசிகள் மற்றும் இரத்தமாதி ரிகளின் ஊடாகவும் பரவுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பற்ற முறையில் ஆண் - ஆணு டன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதால் 40 வீதத்துக்கு அதிகமாக எயிட்ஸ் அதி கரித்துச் செல்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும் - என்றார்.

### பஸிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விவாதம் ஆரம்பமானது.

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர் கள் கருத்துக்களை முன்வைத்த பின்னர், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதில ளித்து உரையாற்றினார். மாலை 6.08 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் பாதீட்டின் 3ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது அதனை ஆதரித்து வாக்களித்தன.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன் னணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பு மற் றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிராக வாக்களித்தன.

வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தீர்மானம் எடுத்திருந்தாலும், கட்சிகளின் முடிவுக்கு மாறாகவே அக்கட்சிகளின் எம்.பிக்கள் வாக்களித்தனர். கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர்.

அதேவேளை, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 5 எம்.பிக்களும் பாதீட்டை எதிர்த்து வாக்களித்தனர்.

அரச பங்காளிக் கட்சிகள், அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர் சித்து வந்தன. இதனால் பாதீட்டின்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலத்தை அரசு இழக்கும் எனக் கூறப்பட்டது. ஆனாலும், மூன்றிலிரண்டு பெரும் பான்மையைப் பெற்று பாதீட்டை நிறைவேற்றியுள்ளார் நிதி அமைச்சர் பஸில்.

இந்தவாரம் இவர்

# ஈழத்து முன்னணி திரைப்பட இயக்குநர்

# மதிசுதா



இலங்கையில் விரல்விட்டு எண்ணும் இயக்குநர்களில் முதல் விரல் எப்போதும் இவருடைய பெயருக்காகவே மடிக்கப் படுகிறது. சிறந்த சமூக அக்கறையும் கலை நுணுக்கங்களுடனும், ஆய்வுத் தேடலுடனும் ஈழத்து சினிமாவை சர்வதேச பரப்புக்கு கொண்டு வந்திருக்கும் மதிசுதா இந்தவாரம் இவர் பகுதியை அலங்கரிக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் உடுப்பிட்டியை சொந்த இடமாகவும் அழகும் செழுமையும் கொழிக்கும் வன்னியை தன் அடையாள பரப்பாகவும் கொண்ட 35 வயதை மட்டும் அடைந்திருக்கும் மதிசுதா சர்வதேச விருதுகளை அள்ளும் திரைப்படங்களை இலங்கையில் இருந்து தந்துகொண்டிருக்கிறார்.

ஒரு கலைஞன் தன் ஆளுமைக்கும் வாழ்க்கைக்கும் இடையில் அடையும் பிரயத்தனங்களே அவனது படைப்புகளாகும் என்பதற்கு மதிசுதாவின் படைப்புகள் உதாரணம்.

வெற்றியை நோக்கி மட்டும் அல்லாமல் தான் கொண்ட இலட்சியம் நோக்கியும் வரலாற்றை கடத்தும் மதிசுதா இயக்குநர்களுக்கு எடுத்துக்காட்டான படைப்பாளியே.

பல கதைப்போக்குகளை கொண்ட குறுந்திரைப் படங்களை இயக்கி நடித்து இருக்கும் இவர் அண்மையில் இயக்கியுள்ள ‘வெந்துதணிந்தது காடு’ என்ற திரைக்காவியம் மூலம் உலக ரசிகர்களையும் விருது வழங்குநர்களையும் தன் பக்கம் திரும்ப வைத்துள்ளார்.

ம.தி. சுதா என்ற அவர் பெயருக்குள்ளேயே அவர் நேசிப்போரின் பெயர்களை பொதித்து வைத்திருக்கின்றார் மகேஸ்வரி தில்லையம்பலம் சுதாகரன் என்பதே இந்த பெயருக்குள் இருக்கும் மர்மம் .

வன்னியின் மல்லாவியில் தன் இளமைக்காலத்தை இனிமையாக தொடங்கிய மதிசுதா ‘றொக்கெட் ராஜா’ என்கின்ற திரைப்படத்தின் மூலம் ஈழ சினிமாவுக்குள் காலடிவைக்கிறார். நடிகராக வேண்டும் என்கின்ற ஓர்மதில் இருந்த மதிசுதாவுக்கு இயக்குநராகி நடிகராகும் சந்தர்ப்பத்தையும் பெரும் வெற்றி உனக்கு காத்திருக்கிறது என்ற செய்தியையும் காலம் கொடுத்திருக்கிறது.

கள மருத்துவத்தில் கைதேந்தவராக இருக்கும் மதிசுதா, காலம் வீசிய அணுகுண்டை பூப்பந்தாக கைகளில் தாங்கி தனக்கும் சமூகத்துக்கும் நெருங்கிய தொடர்பை நிலைநிறுத்தியிருக்கிறார் . தன் எழுத்துக்கள் மூலமாக வலைத்தளங்களை ஆக்கிரமித்த மதிசுதா றொக்கெட் ராஜா திரைப்படத்தில் கணிசமான வெற்றியை காணவில்லை, அந்தப் படம் தனக்கு ஒரு அவமானப் புள்ளி என குறிப்பிடும் அவர் அடுத்ததாக இயக்கிய திரைப்படம்தான் ‘துலைக்கோ போறியள்’ திரைப்படம், இந்த திரைப்படம் மூலம் ஓரளவு அவர் தன் பெயரை திரைத்துறையில் பதிக்கிறார். நடிப்புக்குள் தன்னை ஈடுபடுத்த முனைந்தபோது தனக்கு வந்த நிராகரிப்புக்களை அழகு, நிறம் என்ற போர்வைக்குள் மட்டும் வைத்திருந்த ஈழத்து இயக்குநர்களை அவர் இப்போது விஞ்சி இருக்கிறார் என்பது ஈழத்து சினிமாவுக்கும் வெற்றியையே தந்திருக்கிறது.

தொழில் முறையாக மாறாத இயக்குநர் ஆக தான் இருந்த போதும், ஒரு தனியார் நிறுவனத்தில் கணக்காளராக இருக்கும் மதிசுதா, ஈழத்து சினிமாவுக்கு ஒரு வரப்பிரசாதம்தான், காலம் நம்மீது திணித்த விடயங்களை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பெரும் வரலாற்று சக்தியாக இருக்கிறார், தனது பள்ளி தோழர்கள் 14 பேரை அவர் இறுதி யுத்தத்தில் இழந்திருக்கும் வலியை வரலாற்றுப் பாடமாக நினைவு கூறுவதோடு, திரைத்துறை தொடர்பில் எந்தக் கல்வியையும் முறைப்படி கற்காதபோதும், யாராவது ஒருவருக்கு கீழ் உதவி இயக்குநராக பணியாற்றாத போதும், அவர் திரைத்துறையில் உறுதியாக தடம்பதிக்க முடிந்த விடயம் அவர் கொண்டுள்ள சமூகப் பொறுப்புத்தான் என்பதை அவர் பேச்சிலும், படைப்புக்களிலும் நம்மால் நன்கு உணர முடியும் வகையில் இருப்பது கண்கூடு.

எந்தக் கலைஞனும் தன் படைப்புக்களில் வெற்றி பெறுவது முழுமையான சமூக நல்நோக்கில் என்பதற்கு நம் நாட்டு திரைத்துறையில் மதிசுதா தற்போது சிறந்த எடுத்துக்காட்டு .

ஈழத்து படைப்புக்களுக்கு இருக்க வேண்டிய தனித்துவத்தன்மை அவரது எந்தப் படைப்புக்களிலும் சிதறிப்போவதில்லை அது மொழியாக இருக்கலாம் அல்லது பண்பாட்டு விழுமியங்களாக கூட இருக்கலாம், ஈழத்து வாசம் ஒவ்வொரு அணுவிலும் வீசும் படியே அவரது படைப்புக்கள் இருப்பது ஈழத்து சினிமாத்துறைக்கு கிடைத்துள்ள வரலாற்று வெற்றிதான்.

ஆரம்ப காலத்தில் நகைச்சுவை படங்களை தயாரித்த மதிசுதா இப்போது தயாரிக்கும் திரைப்படங்கள் அனைத்தும் நம் கதைகளை கூறும் திரைப்படங்களாக, வரலாற்றை கடத்தும் திரைப்படங்களாக இருப்பது மிக சிறப்பு.

தற்போது வெந்து தணிந்தது காடு என்ற திரைப்படம் இலங்கையில் உருவாக்கப்பட்டு முதலாவதாக வெளியாகும் திரைப்படமாக i phone மூலம் எடுத்து சாதனை படைத்து இருக்கிறார், 158 பேர் இந்த திரைப்படத்துக்கு முதலிட்டு இருக்கிறார்கள், இதனைவிட இந்த திரைப் படம் இலங்கை அளவில் அதிகளவானோரின் குழு முதலீட்டில் உருவாகும் முதலாவது திரைப்படமாகவும் இந்த திரைப்படம் இருக்கிறது.

இந்த திரைப்படத்தில் இறுதிப்போர் தொடர்பான விடயங்களை காட்சிகளாக்கி இருக்கும் இவர், யுத்தத்தின் அடையாளங்களான, பிணங்களையோ, ஆயுதங்களையோ திரைப்படத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் காண்பிக்கவில்லை. இதற்கு இரண்டு முக்கிய காரணங்களை முன்வைக்கிறார் இயக்குநர் மதிசுதா – ஒரு சமையல் அறையில் அனைத்துப் பொருள்களையும் வைத்துக் கொண்டு சமைக்கும் உணவைவிட ஒருசில பொருள்களை வைத்துக்கொண்டு சமைக்கும் உணவு மிக சுவையாக இருக்கும் என்கிறார். அதாவது தனது தயாரிப்புக்களுக்கு ஒரு வட்டம் இருக்கும் அதன் எல்லைக்குள் பணியாற்றுவதையே தான் முக்கியப் படுத்துகிறேன் என்கிறார். மதில்மேல் பூனையாக இருந்து இந்த திரைப்படத்தை இயக்கி இருக்கும் அவர் கதைக்கரு உறுதியானதாக இருக்க போர் என்ற கருப் பொருளை வில்லனாக வைத்துக்கொண்டு பாதிக்கப் பட்டவர்களை கதாபாத்திரங்களாக சித்திரித்திருக்கிறார் என்பது வெளியாகிறது .போர் என்கின்ற அந்த வில்லனை மட்டும் மக்கள் மத்தியில் குற்றவாளி ஆக காட்டி இருக்கிறார் மதிசுதா - ஆகையால் போர் என்பது எல்லோருக்கும் வில்லனாகதான் இருக்கும் என்பதை நாசுக்காக விளக்கிய அவர் இரத்தம், சதை, ஆயுதம் அனைத்தையும் வில்லனின் தோன்றாக்கருக்களாக்கி படத்தை நகர்த்தி இருப்பது தெரிகிறது – திரைத்துறையில் தான் இந்த படத்தின் மூலம் நஷ்டத்தையோ அல்லது




பின்னடைவுகளையோ சந்திக்க கூடாது என்கின்ற நோக்கோடு வரலாற்றுப் பதிவையும் இலகுவாக்கி இருக்கிறார் என்பதும் தெரிகிறது.

இவரின் ஒரு சமூக தெளிவுபடுதல் படமாக வெளிவந்த ‘மிச்சக்காசு’ என்கின்ற திரைப்படத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய கதையாக வெளிப்படுத்தும் இவர் எல்லோராலும் பேசப்பட்ட ஒரு திரைப்படத்தை தன் அடையாளமாக கொண்டார் என்பதற்கு இந்த மிச்சக்காசு திரைப்படம் தகுந்த சான்றாகிறது. இதே கதைக்கருவை தமிழ்நாட்டில் நான்குபேரால் அந்த திரைப்படம் உருவாக்கப்பட்டிருப்பதுதான் சிறந்த படைப்பாளிக்கான முத்திரை ஆகிறது.

ஈழத்து திரை இயக்குநர்களின் ஒட்டுமொத்த பக்கங்களில் இருந்தும் மதிசுதாவின் படைப்புக்களும், பக்கங்களும் வேறுபட்டு இருப்பதை அனைவரும் அறிவார்கள் . இதற்கு அவர் கொண்டிருக்கும் , வரிந்து கொண்டுள்ள மக்கள்மீதான, வரலாறுமீதான அதீத அக்கறைதான் என்பதை அவர் வெளிப்படுத்த தவறவில்லை, தான் வளர்ந்த இடம், வளர்க்கப்பட்ட இடம், என்பவைகூட அவர் தன் படைப்புகளுக்கான தாக்கமாகவும், வேகமான விவேகமாகவும் கருதுகிறார். காலம்

**- ப்ரியமாத பயஸ் -**

இட்டிருக்கும் சில விடயங்களை வரலாற்று கடத்தல்களை தன் திறமைமூலம் வெளிக்கொணரும் சரியான உத்தியை, பாதையை அவர் பற்றி இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

தென்னிந்திய சினிமாவில் இருந்து நமது படைப்பாளிகள் வேறுபட்டவர்கள் என்பதை எப்படி காட்ட முனையலாம் என்பதை அவரிடம் அறிய முனைந்த போது நல்ல கதைக் கருவைக் கொண்ட தென்னிந்திய சினிமாவை அவர் பலகோணங்களில் பாராட்டியே ஆகவேண் டும் என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறார், ஆனாலும் பெரும்பாலானா ஈழத்து படைப்புகளில் தயாரிப்பாளர்கள் யார் என்பதை ஈழத்து இயக்குனர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதை மதிசுதா சுட்டிக்காட்டுகிறார். முதலீட்டாளர்கள் தனியே பணத்தை மட்டும் கொடுத்துவிடுதல் மட்டும் போதும் என்பது ஈழத்து சினிமாவுக்கு பொருந்தவரவில்லை முதலீட்டாளர்கள் திரை இயக்கத்தின் இயங்கு புள்ளிக்கு வரும்போது எங்களின் சினிமாவும் ஒரு தனித்துவத்தை நோக்கி செல்லும் என்று நம்புகிறார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையின் தொல்பொருள்களை சீனாவுக்கு அனுப்புவதற்கான உடன்படிக்கை கைச்சாத்து!

இலங்கையின் தொல்பொருள்களை ஆய்வுப் பணிகளுக்காக சீனாவுக்கு அனுப்புவதற்கான உடன்படிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) கைச்சாத்திடப்பட்டது.

அதற்கமைவாக சீனாவின் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த உடன்படிக்கைக்கு அமைய, இலங்கையின் தொல் பொருள் ஆய்வுப் பணிகளுக்காக, சீனாவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அந்த திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். எம்.ஜி.ஆரின் 31 ஆம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு



எம்.ஜி.இராமசந்திரனின் தீவிர ரசிகனும் நண்பருமான யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் சர்வம தத்தலைவர்கள் கலந்து கொண்டு கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனை நடத்தினர்.

இந்த நிகழ்வில் குடும்ப உறுப்பினர்கள்,அயலவர்கள், அவரது நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலை யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர். நினைவு தினங்களை அனுஷ்டித்து வந்ததுடன் அத்தினங்களில் வறிய மக்களுக்கு தன்னாலான உதவிகளையும் யாழ் எம்.ஜி.ஆர். செய்து வந்துள்ளார்.

யாழ்.எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் கடந்த மாதம் 11 ஆம் திகதி நோய்வாய்ப்பட்ட நிலையில் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது.

## படைத் தளபதி பிபின் ராவத்தின் இறுதிச் சடங்கில் பங்கேற்க சவேந்திரசில்வா டெல்லிக்குப் பயணம்



ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் இராணுவ இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியாவிற்குச் சென்றுள்ளார்.

அதன்படி, அவர் தனது மனைவி மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட 11 பேருடன் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை புதுடெல்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜெனரல் சவேந்திர சில்வா, இந்தியாவில் உள்ள அவரது துணைத்தலைவரின் துக்ககரமான மறைவைக் கேள்விப்பட்டு, ஊடகங்களுக்கும் கொழும்பில் உள்ள இந்திய உயர்தூதரகத்துக்கும் வெளியிட்ட விசேட இரங்கல் செய்தியில் ஆழ்ந்த வருத்தத்தையும் அதிர்ச்சியையும் தெரிவித்தார்.

இலங்கை ஆயுதப் படைகளின் உண்மையான நண்பராகவும், இராணுவத்தலைவராகவும் தனது நினைவைப் போற்றும் அவர், அவரது முதிர்ந்த இராணுவ அறிவு, கட்டளை, தலைமைத்துவ பண்புகள், தொலைநோக்குப் பணி மற்றும் இணக்கமான பணி உறவு ஆகியவை ஆற்றல் மிக்க தொழில்முறை மற்றும் புதிய சகாப்தத்தை உருவாக்கியிருக்கும் எனத் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி மலைப்பாதையில் கடந்த புதன்கிழமை வானில் பறந்துகொண்டிருந்த இராணுவ ஹெலிக்கொப்டர் திடீரென கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட 14 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சியல்கோட்டில் இலங்கையர் கொடூரமாக படுகொலை; நேற்று கண்டன தினமாக உலமாக்களால் அனுஷ்டிப்பு!

சியல்கோட்டில் இலங்கை பிரஜை படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து உலமாக்கள் மற்றும் மத அறிஞர்கள் மற்றும் சமூகத்தின் ஏனைய பிரிவினர் நேற்று (வெள்ளிக்கிழமை) 'கண்டன தினமாக' அனுஷ்டித்தனர் என மத நல்லிணக்கம் மற்றும் மத்திய கிழக்கு தொடர்பான பிரதமரின் விசேட பிரதிநிதி ஹாபிஸ் தாஹிர் மெஹ்மூத் அஷ்ரபி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் - பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த உலமாக்கள் தங்கள் வெள்ளிக்கிழமை சொற்பொழிவுகளில் வெளிநாட்டினரைக் கொன்று குவிப்பதைக் கண்டிப்பார்கள் என்றும் தெய்வ நிந்தனைச் சட்டங்களை மக்களுக்கு உணர்த்துவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்கள் தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதற்காக மதம் மற்றும் புனிதப் பெயர்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக தேசம் தனது பங்கை ஆற்றுவதற்கான நேரம் வந்துள்ளதாக அஷ்ரபி கூறினார். அதற்கமைய பாகிஸ்தான் அரசு ஏற்கனவே தீர்ப்பை வழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். தீவிரவாதத்தை ஒழிக்க அரசு மற்றும் தேசிய பாதுகாப்பு அமைப்புகளுக்கு மக்கள் துணைநிற்க வேண்டும் என கோரிக்கை விடுத்த அவர், நாடு முழுவதும் உலமா மற்றும் மஷெய்க் மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, கல்வி நிறுவனங்களில் நிந்தனை சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.




## ஈழத்து முன்னணி திரைப்பட இயக்குநர்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணமும் பெயரும் மட்டும் இலக்காக வைக்கப்படும்போது மட்டும் எம் தனித்துவம் கெடும்முகமாக இருப்பதோடு சில சில விடயங்கள் தவிர்க்கப்படுவது துர்ப்பாக்கியமாவதோடு எமது தனித்துவம், மொழி, வாழ்வியல், என்கின்ற படைப்புக்கள் எங்கள் மக்கள் மத்தியில் வெற்றிபெறுவதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

வெந்து தணிந்தது காடு என்கின்ற இறுதிப்போரின் குறியீட்டு படத்திற்கு அவர் பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றிருப்பது ஈழ சினிமாவிற்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி இருக்கிறது.

குறிப்பாக சொல்லப்போனால் சமகாலத்தில் ஈழத்து சினிமாவுக்கான திருப்புமுனை இயக்குனராக மதிசுதா தன் கால்தடத்தை பதித்து இருக்கிறார்.

வெந்து தணிந்தது காடு திரைப்படம் இதுவரை 10 சர்வதேச விருது விழாக்களில் 18 விருதுகளை பெற்றிருக்கின்றது.

1) Birsamunda International Film Festival இல்
Honorable Mention For Best All catagery
2) கேரளாவில் இடம்பெறும் Cuckoo International Film Festival இல்
Honorable Mention For Best All catagery
3) Golden Leaf International Film Festival இல்
Best Writer
Best Producer
4) Hodu International film festival இல்
Best Debut Film
Special Jury Award for Best International Feature Film
5) Marudham Indie Film Festival இல்
Best Asian Film
6) Madras Independent Film Festival இல்
Special Mention

ஆகிய விருதுகளை வெண்றுகுவித்திருக்கிறது. ஈழத்து சினிமாவுக்கு முக்கிய அடிக்கல்லாக - வரலாற்று திடமாக மதிசுதாவின் படைப்புக்கள் இன்னமும் வெளிவர வேண்டும் என்பதே அனைவரதும் அவா.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2021 இல் வெளியிடப்பெற்றது.